# 12 நல்வழி



ஔவையார் தமிழ் நாட்டில் வாழ்ந்த பெண் புலவர். அவர் வள்ளல் அதியமான் அளித்த நெல்லிக்கனியை உண்டு நீண்ட காலம் உயிர் வாழ்ந்தார். நல்வழி, கொன்றைவேந்தன், மூதுரை, ஆத்திசூடி, ஞானக்குறள், ஆசாரக்கோவை போன்றவை அவர் பாடிய பாடல் தொகுப்புகளாகும்.

நல்வழி, ஔவையார் இயற்றிய ஒரு தமிழ் நீதி நூல் ஆகும். மக்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அறக்கருத்துக்களை இந்நூல் எடுத்துக் கூறுவதால் இதற்கு இப்பெயர் வந்தது. இந்நூலில் நாற்பது வெண்பாக்கள் உள்ளன.

## சாதி இரண்டு

**சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்**
**நீதி வழுவா நெறிமுறையின் – மேதினியில்**
**இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்**
**பட்டாங்கில் உள்ள படி.** **வெண்பா : 2**

**பொழிப்புரை**

*சொல்லப்போனால் பூமியிலே சாதி இரண்டே அல்லாமல் வேறு இல்லை.* நீதியினின்று தவறாத ஒழுக்கமுறைப்படி பொருள்தேடி மற்றவர்க்கு கொடுத்து வாழ்பவரே உயர்ந்த சாதியினர். தர்மம் செய்யாதவரே இழிந்த சாதியினர். இதுவே அறநூலில் கூறப்பட்டுள்ள உண்மையாகும்.

**பதங்களுக்குரிய கருத்து**

*ஒழிய - அல்லாமல்; சாற்றுங்கால் - சொல்லுமிடத்து; மேதினி - பூமி; இட்டார் - கொடுத்தவர்; பட்டாங்கு - உண்மை நூல்(அறநூல்)*

## மரியாதையே தேட்டம்

ஈட்டும் பொருண்முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம் – தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம். *வெண்பா : 8*

**பொழிப்புரை**

*பூமியில் வாழும் மனிதர்களே கேளுங்கள்:* பொருள் தேடுகின்ற முயற்சிகள் எண்ணில்லாதவையாக இருப்பினும் விதி கூட்டிவைத்தாலேயன்றிச் செல்வம் வந்துசேராது. சேர்ந்தாலும் தங்காது. அதனால், நீங்கள் தேடக்கூடிய செல்வம் மரியாதையே ஆகும்.

**பதங்களுக்குரிய கருத்து**

*ஈட்டும் - சேர்க்கும்; எண்ணிறந்த - அளவில்லாத; தேட்டம் - தேடியது; மகிதலம் - பூமி; தரியாது - நில்லாது; தனம் - பொருள்.*

## நல்லகுடிப்பிறந்தார் இயல்பு

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும், அந்நாளும் அவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிபிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை என மாட்டார் இசைந்து. வெண்பா : 9

**பொழிப்புரை**

ஆறானது, கோடைகாலத்தில் வெப்பத்தால் வற்றி சுடுமணலாய்க் கிடந்தாலும் நீரை விரும்பி யாராவது தோண்டினால் ஊற்றெடுத்து உலகத்தவர்க்கு உதவி செய்து காப்பாற்றும். அதேபோல, நல்ல குடியில் பிறந்தவர்கள் மிகவும் வறியவராக மாறிய நிலையிலும் தம்மிடம் வந்து இரந்தவர்க்கு இல்லை என்று மனம் ஒப்பிச் செல்லார். ஏதோவகையில் உதவி செய்தே தீருவார்.

**பதங்களுக்குரிய கருத்து**

பெருக்கு - வெள்ளம்; ஊற்று - சுரத்தல்; ஊட்டும் - காப்பாற்றும்; நல்கூர்ந்தார் - வறுமையடைந்தவர்; இசைந்து - மனம் ஒப்பி.

## உழுதுண்டு வாழ்தலே உயர்ந்தது

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. வெண்பா : 12

**பொழிப்புரை**

நீர்பெருகி ஓடும் ஆற்றோரத்திலே உள்ள மரமும் அரசன் அறிய செல்வத்திற் சிறந்திருக்கும் பெருவாழ்வும் ஒரு காலத்தில் அழிந்து விடும். ஆதலால், உழுது பயிரிட்டு உண்டு வாழ்வதற்கு நிகரான உயர்ந்த வாழ்வு வேறில்லை. ஏனெனில் மற்றைய தொழில்களுக்கு எப்பொழுதும் குறைகள் உள்ளன.

### பதங்களுக்குரிய கருத்து

வீற்றிருந்த - பெருமையோடு வாழ்ந்த; விழும் - அழியும்; ஏற்றம் - உயர்வு; பழுது - குறைகள்.

## மூடனுக்கு எப்படி விளக்குவது

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே – தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு. *வெண்பா : 35*

### பொழிப்புரை

பூக்காமலே காய்க்கின்ற மரங்களும் உள்ளன. அவைபோல், ''ஒன்றைச் செய்'' என்று கட்டளையிடாமலே தானாகக் குறிப்பறிந்து செயலாற்றுவோரும் உள்ளனர். நன்றாகத் தூவி விதைத்தாலும் நன்கு முளைக்காத வித்துப்போல, அறிவில்லாத மூடனுக்கு எவ்வளவுதான் சொன்னாலும் நல்லறிவு உண்டாகாது.

### பதங்களுக்குரிய கருத்து

ஏவாதே - கட்டளையிடாமலே; தூவா - தூவி; விரைத்தாலும் - விதைத்தாலும்; பேதை - மூடன் (அறிவிலி); உணர்வு - நல்லறிவு.

### அகராதிப் பயன்பாடு




மேடு -
குடி -
ஏற்றம் -
உற்றார் -
மாநிலம் -
பேதை -

பயிற்சி

## 12.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. 'நல்வழி' கூறும் இரு சாதிகளும் எவை?
2. 'நல்வழி' இல் கூறப்பட்டுள்ள மனிதர்கள் தேடத் தகுந்த செல்வம் எது?
3. நல்ல குடியில் பிறந்தவர்களுடைய இயல்பு யாது?
4. உயர்வான வாழ்வாக ஔவையார் எவ்வாழ்வைக் குறிப்பிடுகின்றார்?
5. நல்வழிப் பாடல்கள் மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட அறக்கருத்துக்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

### இணைமொழிகள்

ஒன்றுக்கொன்று ஒத்த கருத்தையோ அல்லது எதிர்க்கருத்தையோ தரும் இரு சொற்கள் சேர்ந்து வருமாயின் அது இணை மொழியாகும்.

உதாரணம் :

ஒத்தகருத்து - அக்கம் பக்கம், உற்றார் உறவினர்

எதிர்க்கருத்து - மலையும் மடுவும், உள்ளும் புறமும்

## 12.2 பின்வரும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான இணை மொழிகளை தெரிந்து எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| உற்றார் உறவினர் | அல்லும் பகலும் | வரவு செலவு |
| சீரும் சிறப்புமாக | ஏறக் குறைய | |

1. அங்கே .................................... ஆயிரம் மக்கள் கூடினர்.
2. அவனுக்கு .................................... எவருமில்லை.
3. உழவன் .............................. பாடுபட்டு உழைத்தான்.
4. மணமக்களை யாவரும் .................................... வாழ வாழ்த்தினர்.
5. தந்தை மாசி மாத இறுதியில் .............................. விபரங்களைக் கணக்கிட்டார்.

## 12.3

### (அ) பின்வரும் இணைமொழிகளை வாக்கியங்களில் அமைத்து எழுதுவோம்.

உதாரணம் : தாய் தன் குழந்தையைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டார்.

1. கள்ளங் கபடம்
2. கையும் மெய்யும்
3. பழக்க வழக்கம்
4. ஏற்ற இறக்கம்
5. கண்ட துண்டம்
6. அக்கம் பக்கம்

### (ஆ) பகுதி (I) க்குப் பொருத்தமான சொல்லை பகுதி (II) இல் இருந்து தெரிவுசெய்து இணைப்போம்.

| பகுதி (I) | பகுதி (II) |
|---|---|
| 1. வடக்கு, மேற்கு, கிழக்கு | காலங்கள் |
| 2. இனிப்பு, துவர்ப்பு, புளிப்பு | மொழிகள் |
| 3. நெல், கோதுமை, குரக்கன் | நிறங்கள் |
| 4. சிவப்பு, பச்சை, நீலம் | தானியங்கள் |
| 5. தமிழ், ஆங்கிலம், சிங்களம் | சுவைகள் |
| 6. இளவேனில், முதுவேனில், வசந்தம் | திசைகள் |
| 7. மல்லிகை, முல்லை, செவ்வரத்தை | மாதங்கள் |
| 8. ஆடி, ஐப்பசி, புரட்டாதி | பூக்கள் |

## 12.4 பின்வரும் வாக்கியங்களில் வரவேண்டிய பொருத்தமான வினைச்சொற்களை எழுதுவோம்.

1. நானும், அப்பாவும் சந்தைக்குச் ..........................................................
2. புறாக்கள் தானியங்களைக் ..........................................................
3. வைத்தியர் நோயாளியை ..........................................................
4. சாரதி வண்டியை மெதுவாக ..........................................................
5. ஆசிரியர் பாடத்தைக் ..........................................................
6. அண்ணா அழகான ஓவியத்தை ..........................................................
7. தாய்ப்பசுவிடம் கன்றுக்குட்டி பால் ..........................................................
8. மான் கூட்டம் புல்வெளியில் ..........................................................


இலவசப் பாடநூல்

## 12.5 தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களை எழுதுவோம்.

1. காய்ச்சலால் / அன்வர் / துன்பப்பட்டான் / கடுமையான (.........................)
2. அஞ்சல் நிலையத்தினால் / வகையான / பல / நாம் / அடைகிறோம் / நன்மைகளை (.................................................................................)
3. விளங்குகின்றன / உயர்ந்து / உலகில் / நாடுகள் / உழைப்பைப் / போற்றும் (.................................................................................)
4. கண்ணையும் / கருத்தையும் / சிற்பங்கள் / அழகு / கவரும் / வாய்ந்தவை (.................................................................................)
5. பயன்படும் / பலவகையிலும் / மரங்களை / காப்பது / வளர்த்துக் / கடமையாகும் / நம் / எமக்குப் (..........................................................)

## 12.6 தரப்பட்ட நிகழ்வுகளை வாசித்துப் பொருத்தமான எதிர்வு கூறலைத் தெரிவு செய்வோம்.

1. அப்துல்லா வீதியில் செல்லும்போது பார்வை இழந்த முதியவர் வெள்ளைப் பிரம்புடன் வீதியோரம் நிற்பதைக் கண்டான். அப்துல்லா செய்யக்கூடியது யாது?
   i. கவனியாது செல்லல்.
   ii. வீதியை கடந்து செல்ல அவருக்கு உதவி செய்தல்.
   iii. வயோதிபரை பார்த்து நகைத்துச் செல்லல்.

2. மேரியின் நண்பி பாடசாலைக்குப் பென்சிலை எடுத்து வர மறந்து விட்டாள். மேரி செய்யக் கூடியது யாது?
   i. நண்பியைக் கண்டித்தல்.
   ii. தன்னிடமுள்ள மேலதிக பென்சிலை நண்பிக்குக் கொடுத்தல்.
   iii. வேறொரு நண்பியைத் தெரிவு செய்தல்.

3. பாடசாலையில் குமரன் நடந்து செல்லும்போது ஒரு மாணவனை இடித்துக் கீழே தள்ளி விட்டான். குமரன் செய்ய வேண்டியது யாது?
   i. கீழே விழுந்த மாணவனை தூக்கி விட்டு மன்னிப்பு கேட்டல்.
   ii. கீழே விழுந்த மாணவனை ஏசுதல்.
   iii. கீழே விழுந்த மாணவனைக் கவனிக்காமல் செல்லுதல்.